**நாள்: 06.04.2026**
**O.S. No. 37/2023**

**வா.சா.1**
**பெயர்: வீரையன், த/பெ. ராமசாமி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் சந்து பாதையை அடைத்துள்ளார்கள். அதை மீட்டு தர வழக்கு போட்டுள்ளேன். நான் கூறும் சந்தானது எந்த சர்வேஎண்ணில் உள்ளது என்றால் 43/11B ல் உள்ளது. மேற்படி 43/11B மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ½ ஏர்ஸ் ஆகும். மேற்படி ½ ஏர்ஸ் வீஸ்தீரணத்திற்குள்தான் நான் கூறும் சந்து உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்து விபரத்தில் நான்கெல்லையாக நான் கூறும் சந்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல சந்து தாவா சொத்தின் நான்கெல்லையாக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சந்திற்கு தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் தாவா புலஎண்ணை சேர்ந்தது தான். இது வரை எத்ததனை முறை தாவா சொத்தை சர்வேயர் மூலம் அளவீடு செய்துள்ளேன் என்றால் இரண்டு முறை அளவீடு செய்துள்ளேன். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் அவர்களது பணியை சரிவர செய்யவில்லை. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் ஆகியோர்மீது மேல் நடவடிக்கை எடுத்துளேனா என்றால் உயர் அதிகாரியிடமும் முதலமைச்சர் தனிப்பிரிவிலும் புகார் கொடுத்துள்ளேன். நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 2020 க்கு முன்பு புகார் கொடுத்தேன்.

வழக்குரையில் கூறியுள்ளவாறு 02.04.2022 அன்று தான் தாவா சொத்தின் வடபுறமாக பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளாரா என்றால் 2020 லேயே ஆக்கிரமித்துவிட்டார். அதன் பிறகு தான் நான் சர்வேயரிடம் அளவீடு செய்ய மனு கொடுத்தேன். சர்வேயர் அளவீடு அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அறிக்கை கொடுக்கவில்லை. அளவீடு செய்வதை பாதியிலேயே நிறுத்திவிட்டார்கள். VAO மற்றும் சர்வேயர்

மீது நான் கொடுத்த புகாரின் மீது எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கையை பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் புகாருக்கு  பதில் எதுவும் வரவில்லை. மேற்படி VAO மற்றும் சர்வேயர் ஆகியோருக்கு எதிராக நான் கொடுத்த புகார் மனுக்கான ஆதரவு ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்தின் வடபுறம் உள்ள  பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 43/11A ஆகும். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு சர்வேயர் மூலம் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ஆஜர் ஆனது குறித்த மெமோவில் நான் கையொப்பம் செய்ய மறுத்துவிட்டேன் என்றால் சரிதான். சர்வேயர் அளவீடு செய்த போது எனது வீட்டு எல்லைக்குள்ளாகவே தாவா புலஎண் 43/11B அமைந்துள்ளது என அளந்து காண்பிக்கப்பட்டது என்றால் சரிவர அளவீடு செய்யவில்லை.

தாவா சந்தை பிரதிவாதி என்னிடம் விலைக்கு கேட்டதை நான் கொடுக்க மறுத்துவிட்டேனா என்றால் அவர் என்னிடம் விலைக்கு கேட்கவில்லை. நான் பிரதிவாதியிடம் தேவையில்லாமல் சண்டையிட்ட காரணத்தாலேயே அவர் தனது இடத்திலிருந்து தள்ளி வீடு கட்டி வருகிறார் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல சந்துபகுதி எதுவும் இல்லை என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.04.06 14:46:23 +0530